# அலகு ~ 3

## நாடகம் – பாரதிதாசன் நாடகங்கள்

### நாடக இலக்கியம்

தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்த வரையில் கி.பி. 16–19ம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்க காலங்கள் ஆகும். இக்காலத்தில்தான் நாடக இலக்கியங்கள் நமக்கு எழுத்து வடிவில் கிடைக்கலாயின. நாடகங்கள் பொதுவியல் கூத்தாக, மக்கள் கலையாக வளர்ந்தன. நாட்டுப்புற நாடகங்கள் என்ற வகையில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம், விலாச நாடகம், யட்சகானம், பாகவதமேளா நாடகம் போன்றவை இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றன. இவற்றின் அமைப்பு பெரும் பாலும் தெருக்கூத்தை ஒட்டியிருந்தது. மேடையின்றி, கட்டை கட்டிக்கொண்டு தெருக்களில் ஆடப்படும் தெருக் கூத்து இயல், இசை, கூத்து எனும் முக்கிய கூறுகளையும் தன்னுள் அடக்கிய கலை. தமிழின் தொன்மையான நாடக மரபைக் காத்து வந்த பெருமை இத்தெருக்கூத் திற்கு உண்டு. பெரும்பாலும் இசை நாடகமாகவே இது அமையும். இதில் அங்கம், களம் என்ற பகுப்புகளின்றி கட்டியங்காரன் இன்றியமையாத பாத்திரமாக இடம் பெறுவான். தெருக்கூத்து, பாடலும் வசனமும் கலந்து வரும் இசைக்கூத்தாக அமையும். மேற்கூறிய நாட்டுப் புற நாடக வகைகள், தெருக்கூத்தின் அமைப்பையும், நடிப்பு முறையையும் தம்மகத்தே கொண்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. நாடக இலக்கியம் பற்றி டாக்டர் சு. வேங்கடராமன், மேலும் தரும் கருத்துகளை இங்குக் காண்போம்.

நாட்டுப்புற நாடகங்களின் தாக்கத்தைத் தொடக்க கால சமூக நாடகங்களிலும் காணலாம். பொதுவாக மேடை நாடகங்கள் வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும் நாட்டுப் புற இசை நாடகங்கள் பொது மக்களிடையே மிகுந்த செல்வாக்குடனும் அதே நேரத்தில் மேடை நாடகங்களில் பாதிப்பை ஏற்படுத்தியும் விளங்குகின்றன. நாட்டுப்புற நாடகங்களில் மொழி, பாடல், யாப்பு, இசை, கூத்துமுறை, ஒப்பனை, ஆடை அணிகலன் போன்ற அனைத்தும் எளிய மண்ணின் மணமிக்க மக்கள் வாழ்வியலோடு ஒன்றியதாக இருந்தன. நாடகம் பார்ப்பவர்களுக்கு பொழுது போக்கை நல்குவதுடன் உயர்ந்த அறிவூட்டும் வாயிலாகவும் விளங்கின. இவற்றில் நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் பல இடம் பெற்றன. தாலாட்டு, ஒப்பாரி, ஏசல், கும்மி, கப்பற்சிந்து, ஒடப்பாட்டு, முளைப்பாட்டு, தர்க்கப்பாட்டு போன்ற பலவற்றையும் இக்கால நாடகங்களில் பார்க்கலாம். இவ்வாறு நாடகக்கலை மக்களின் வாழ்வியலோடு ஒன்றிய தாக இருந்தது.

பள்ளு நாடகங்களில் முக்கூடற்பள்ளு, காலத்தால் முற்பட்டது. இதனை என்னாயினாப்புலவர் 18ஆம் நூற்றாண்டில் நாடகமாக விரிவுபடுத்தினார். பள்ளு நாடகங்களில் இடம்பெறும் பண்ணைக்காரன் பாத்திரப்படைப்பு, சமூக அங்கமாக விளங்கியது. நகைச்சுவையுடன் அவனுடைய செயல்கள் நாடக ஆசிரியரால் பாடப்பட்டன. பள்ளில் இடம் பெறும் பள்ளனின் இரு மனைவியர்களான பள்ளியர் களுக்கிடையில் எழும் முரண்பாடு நாடகச்சுவையை நல்குகிறது.

குறவஞ்சி நாடகம் ஆலயங்களில் நடிக்கப்பட்டது. குறம் இலக்கியத்தின் வளர்ச்சியான இதில் வேறுபட்ட வாழ்க்கை நிலைகளில் காணப்படும் முரண் நாடகச் சுவையை நல்குகிறது. ஆலயங்களில் உள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளர், குறவர் வாழ்வியலை முறையே பள்ளு, குறவஞ்சி நாடகங்களாகப் படைத்து ஆலயங்களிலே நடித்த தன்மை பாராட்டுக்குரியது.

நொண்டி நாடகம், நொண்டி ஒருவன் தன் கடந்த கால வாழ்க்கையை நினைவுகூரும் வண்ணம் அமைந்தது. கள்ளர்களின் வாழ்வை மையமிட்டது இந்நாடகம். கீர்த்தனைகளாக முழுவதும் அமையும் நாடகம் கீர்த்தனை நாடகமாகும். நாடகமாக நடிக்கவும், கதையுரை கலையாகச் (கதா காலட்சேபமாக) சொல்லவும், தனியே இசை அரங்கு களில் பாடவும் கூடிய தன்மையுடையவை கீர்த்தனை நாடகங்கள். மேல் நாட்டு "ஆபரா"வுடன் இவை ஒப்புவமை உடையவை. நாட்டுப்புற நாடகங்களில் இடம் பெறும் 'தரு' எனும் இசைப்பாடல் வகையில் ஒன்றான இத்தரு நாடகங்களில் மாந்தர் அறிமுகம், நுழைவு, புலம்பல், வர்ணனை, இரு மாந்தர் உரையாடல், தர்க்கம், ஏசல் போன்ற பல்வேறு நிலைகளுக்கும் பயன்பட்டன. புராணக் கதைகளே பெரும்பாலான நாட்டுப்புற நாடக வகைகளில் கதைகளாக அமையக் காண்கிறோம்.

தெருக்கூத்தின் வளர்ச்சியில் புராணக் கதைகளிலிருந்து சமூகக் கதைக்கு மாற்றத்தையும் காண்கின்றோம். வரலாற்றைக் கூறும் வன்னியர் நாடகம், இள நாடகம் போன்றனவும், கோவலன் நாடகமும், ஒட்ட அலங்கார ராசன், கட்டபொம்மன் வரலாறு கூறும் நாடகங்களும் தேசிங்கு தோன்றின. அலிபாதுஷா நாடகம், ஆரிய சபா நாடகம் என்பன அரசியலைப் பற்றினது. மாரிமுத்தா பிள்ளையின் அநீதி நாடகம் 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த சமூக சீர்திருத்த நோக்குடையது. நொண்டி நாடகத்தில் சமூக சீர்திருத்தத்தின் வித்தினைக் காண்கிறோம். அங்கத நாடக வகைக்கு இது சிறந்த சான்று. டம்பாச்சாரி விலாசம் 19ம் நூற்றாண்டில் தோன்றிய சமூக சீர்திருத்த நாடகமாகும். தாசில்தார் நாடகம் (காசி விஸ்வநாத முதலியார் படைத்தது) அக்கால அரசு அதிகாரிகளின் போலித்தனத்தை சுட்டிக்காட்டும் சமூக சீர்திருத்த நாடகம். இந்நாடகத்தில் மிகுதியாக பிறமொழிச் சொற்களைக் காணலாம். சமூக அங்கத நாடக வகைக்கு இதுவும் சிறந்த சான்று. பிற்காலத்தில் அங்கத நாடகங்கள் (சபாபதி போன்றவை) தோன்றவும், நாடகங்களில் பிறமொழிச் சொற்கள் இடம் பெறக்கூடிய சூழலை காசி விசுவநாத முதலியாரின் மேற்குறிப்பிட்ட இரு நாடகங்களிலும் காணலாம். இவையும் தெருக்கூத்து அமைப்பிலே படைக்கப்பட்டன. மிகுதியும் பாடல்களையும் இடையிடையே கட்டியங்காரனின் கூற்று முறையில் பாடல்களின் விளக்கமாக அமையும் உரையாடல் (வசனம்) என்ற நிலையிலிருந்து மாறி வளர்ச்சி பெற்ற நிலையையும் டம்பாச்சாரி விலாசம் நாடகம் காட்டும். இந்நாடகத்தில் மிக நீண்ட உரையாடல் களையும், வசனப்பகுதிகளையும் காணலாம். 1877ஆம் ஆண்டு வெளிவந்த பிரதாப சந்திர விலாசம் என்னும் நாடகம் பெரும்பாலும் உரைநடையிலான நாடகம் ஆகும். ஆங்கில நாடக அமைப்பை ஒட்டி களம், காட்சி என்ற பகுப்பையும் இங்கு முதலில் நாம் காண்கிறோம்.

நாடக மேடை வரலாற்றில், வளர்ச்சியில் கோவிந்தசாமி ராவ் குறிப்பிடத்தக்கவர். மேடை ஏதுமின்றி வீதி நாடகமாக இருந்த கூத்தினை அரங்கிற்குள் மேடையிட்டு நடிக்குமாறு இவர் செய்தார். மராட்டிய நாடக மேடை மரபையும் இவர் தமிழ் நாடக மரபில் புகுத்தினார். குழு அமைத்து நாடகங்களை இவர் நடித்தார். தமிழ் நாடகத் மேடையை நெறிப்படுத்திய சான்றோர் நாடகத்தந்தை சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார், தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என பாராட்டப்படுபவர். தெருக்கூத்தின் அமைப்பு முறையையும், உயிர்த்துடிப்பையும் நன்கு உணர்ந்து அதே தன்மையில் நாடகங்களை இசை நாடகங்களாகப் படைத்தார். மேடையமைத்து, காட்சி மாற்றம், நுட்பமான திரைச்சீலை, பின்னணி, ஒலி, ஒளி அமைப்பு, நயமான வசனங்கள், தமிழ்மொழியின் பெருமை கலைச் சிறப்பு, பண்பாட்டு விளக்கம் போன்ற பல்வேறு கோணங்களில் நாடகக்கலையை ஆழமும் அகலமும் உடையதாக்கி நாடக மேடைக்கு உயிரூட்டினார். புராண நாடகங்களின் நிகழ்ச்சிகளில் இடையிடையே சிறந்த அறிவுரைகளைப் படைத்தார். நடிகர்களைக் கலைஞர் என்ற நிலைக்கு உயர்த்தினார். சிறுவர்களைக் கொண்டு 'பாலசபா' என்ற அமைப்பை ஏற்படுத்தி, குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்டார். சிறந்த நடிகர், நாடக ஆசிரியர், இயக்குநர், பார்வையாளர் என்ற அனைத்து நிலைகளிலும் இருந்து நாடக மேடையைச் செம்மைப்படுத்தினார். சிறந்த இசைப்பாடல்கள் மட்டுமின்றி தமிழ் உரையாடல்களின் மூலம் நடிகர்களின் பேச்சாற்றலையும் வளர்த்தார். அரங்க நிர்மாணம், காட்சி மாற்றம், காட்சி அமைப்பு போன்ற மேடை நுணுக்கங்கள் வளர்ச்சியில் சுவாமிகளின் சாதனை அளவிடற்கரியது. புராண நாடகங்களை எல்லோரும் விரும்பும்படி படைத்தார். இன்றும் தென் தமிழ்நாட்டு இசை நாடகங்களாக இவருடைய நாடகங்களே பட்டிதொட்டிகளில் நடிக்கப்ப பட்டு வருகின்றன.

கந்தசாமி முதலியார் சமூக சீர்திருத்த நாடகங்கள் பலவற்றைப் படைத்தார். நாவலாசிரியர்களின் நாவல்களை நாடகமாக்கினார். நாடக விளம்பரங்களில் புதுமைகளைப் புகுத்தினார். தமிழ் நாடக உலகில் குறிப்பிடத்தக்க பெருஞ் சாதனையாளர் சம்பந்த முதலியார். சுகுண விலாச சபை என்ற பெயரில் பயில்முறை நாடக சபையை நிறுவினார். சம்பந்த முதலியாரின் வடமொழி, ஆங்கில அறிவு நாடகத்தில் புதுமைகளைச் செய்ய உதவியது. பாடல்கள் நிறைந்த நாடகங்களில் தோன்றி, முழுவதும் உரைநடையிலான நாடகங்கள் வரை பல்வேறு நிலைகளில் நாடகங்களை அவர் படைத்தார். அவருடைய சபாபதி நாடகம் சிறந்த அங்கத நாடகம். அவருடைய சிறந்த நடிப்புத் திறனும், படைப்புத்திறனும் ஆராய்ச்சிப் போக்கும் தமிழ் நாடக மேடையை வளப்படுத்தின. நாடக மேடை நினைவுகள் (ஆறு பாகங்கள்) நாடகத்தமிழ் போன்ற அவருடைய நாடகத்திறனாய்வு நூல்கள் தமிழ் நாடக மேடையின் வரலாற்றை அறிய உதவும் ஆவணங்களாகும். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் கிராம மக்களின் கலையாக விளங்க, சம்பந்த முதலியாரின் நாடகங்கள் நகர மக்களை

நாடகங்களான இவை பொது மக்களுக்கு பொழுது போக்குடன் அறிவூட்டலையும் நல்குகின்றன. உடையப்பாவின் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையில் ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், எஸ். டி. ஆர். மகாலிங்கம் போன்றோர் நடத்திய ஸ்பெஷல் நாடகங்களில் இசை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இதே தன்மையில் உடையப்பாவின் நாடகங்கள் அமைகின்றன. இவருடைய நாடகங்கள் சென்னை போன்ற பெரு நகரங்களில் அவ்வப்போது நடிக்கப்பட்டாலும், தென்தமிழ் நாட்டு சிற்றூர்களில் தான் வரவேற்பு மிகுதி.

நாட்டிய நாடகங்கள் என்ற வகையில் பல நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. புராண இதிகாசக் கதைகளும், சிலப்பதிகாரமும், குறவஞ்சிகளும் இவ்வாறு நடிக்கப் படுகின்றன. இவை ஒருவகை வளர்ச்சி. இந்த நூற்றாண் டில் ஏற்பட்ட மற்றொரு வளர்ச்சி வானொலி நாடகங்களா கும். வானொலியில் நீண்ட நேர நாடங்கள், குறுகிய கால நாடகங்கள் என்று பல்வேறு வகைகளில் நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. வானொலி நாடகத்தில் இன்றி யமையாத இடம் பெறுவது உரையாடல்தான். மேடையில் நடிகரின் நடிப்பு, ஒலி, ஒளி, காட்சியமைப்பு, பின்னணி, திரைச்சீலை போன்ற பல்வேறு அமைப்புகளால் நாடகத்தை வெளிப்படுத்தி விடலாம். வானொலி நாடகத்தில் இவை அனைத்தும் உரையாடல் வழியே வெளிப்படுகின்றன. எனவே, வானொலி நாடகம் படைப்பவரின் எழுத்தாற்றலை யும், நடிகர்களின் குரல்வளத்தையும் அடிப்படையாகக் கொண்டு வெற்றி பெறுகிறது. அண்மைக் காலங்களில் வானொலி வழியே மேடை நாடகங்கள் பகுதி பகுதியாக ஒலிபரப்பப்படுகின்றன. அவ்வப்போது அகில இந்திய நிலையில் பிறமொழி நாடகங்கள் மொழி பெயர்க்கப்பட்டு முழுநேர நாடகங்களாக ஒலிபரப்பப்படுகின்றன. புகழ் பெற்ற நவால்கள் நாடகங்களாக்கப் பெற்று ஒலிபரப்பப்படுகின்றன. வானொலி நிலையங்கள் ஆண்டுதோறும் நாடக விழாக்கள் மூலம் நாடகங்களை ஒலிபரப்புகின்றன. இவ்வாறே, அண்மைக்காலமாகத் தொலைக்காட்சி வழியேயும் நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன.

அரசு நிலையில் நாடகக்கலைக்கு ஊக்கந்தரும் வண்ணம் கலைஞர்கள் பாராட்டப்படுகின்றனர். தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் சிறந்த நூல்களை வெளியிட நிதி உதவி செய்கிறது. இவ்வகையில் கூத்தநூல் வெளியிடப் பட்டது. தென்னிந்திய நாடக நடிகர் சங்கமும் புது டில்லி யில் உள்ள அமைப்புகளும் சிறந்த கலைஞர்களுக்கு ஊக்கம் தருகின்றன. நாடகப்பயிற்சிப் பணிமனைகள் நடத்தி நாடகக் கலை நுட்பங்களை கற்றுத்தர இவை துணை நிற்கின்றன. பிற மாநிலக் கலைக்குழுவினர் பிறநாட்டு நாடகக் குழுவினர் ஆகியோர் வருகை தரும் போது சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து நாடகக் கலை வளர்ச்சிக்கு இவை தொண்டு செய்கின்றன.

### மனோன்மணியம்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியம் தொடங்கி, கவிதை நாடகங்கள் என்ற ஒருவகை நாடகங்கள் தோன்றின. இவை பெரும்பாலும் மேடை நாடக அமைப்பு என்ற பாங்கு பற்றி கவலை கொள்ளாமலே படைக்கப்பட்டன. குறிப்பாக, அனைத்து மாந்தர்களும் கவிதையிலே உரையாடியமை இயல்பிற்கு மாறுபட்டதாக அமைந்தது. இவற்றின் விளைவாக, படிப்பதற்குரிய நாடகம் என்று இக்கவிதை நாடகங்களை வகை செய்தனர். கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படவே இவ் வகை நாடகங்கள் மிகுதியும் தோன்றின. வடமொழி, ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழி நாடகங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இவை மொழி பெயர்ப்பு நாடகங்கள் என்.ற வகைப்படுத்தப்பட்டன.

தனிப்பட்ட முறையில் தனியாக ஒருவரோ, பலர் கூடி குழுவாக அமைந்தோ நாடகக்கலை வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றி வருகின்றனர். தொடக்கக் காலத்தில் பரிதிமாற்கலைஞர் படைத்த நாடகவியல் நூல் இத்தன்மை யில் குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலங்களில் எஸ்.வி. சகஸ்ரநாமம் தம்முடைய சேவா ஸ்டேஜ் நாடகக் குழுவின் துணையுடன் நடத்தும் நாடகப்பயிற்சிப் பள்ளியும், சென்னையில் இயங்கும் கூத்துப்பட்டறை, பரீக்ஷா போன்ற அமைப்புகளும், மதுரையில் இயங்கும் நிஜநாடக இயக்கமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க முயற்சிகளாகும். கூத்துப்பட்டறை என்ற அமைப்பு தெருக்கூத்தை நவீனப் படுத்தி, தமிழ் நாடக மேடை மரபின் தொன்மையை நிலை நாட்ட எண்ணி முயற்சித்துப் பணியாற்றி வருகிறது.

## இலக்கியத் திறனாய்வு தேவையா?

இலக்கியத்திறன் கவிஞரின் உணர்வுடன் தொடர்புடையது. டாக்டர் மு.வ. அவர்கள் தனது இலக்கியத்திறன் நூலில் இதுபற்றி விளக்கும் பகுதியை இங்கு காண்போம்.

## நாடகங்கள்

1. கற்கண்டு
2. பொறுமை கடலினும் பெரிது
3. இன்பகடல்
4. சத்திமுத்தப் புலவர்

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்.

"**கற்கண்டு**" நாடகத்தில் இளம் பெண்ணை முதியவன் மணந்து கொள்ளும் கொடுமை எதிர்க்கப்படுகிறது.மேலும் கடனுக்காக தன் மகளை திருமணம் செய்து வைக்க முயலுகையில் இளைஞன் ஒருவன் காப்பாற்றுகிறான்.அவனே அப்பெண்ணை திருமணம் செய்துகொள்ளுகிறான். இவ்வாறு சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளை மிகவும் எதார்த்தமாக ஆசிரியர் எழுதியுள்ளார்.
"**பொறுமை கடலின் பெரிது**" என்ற இந்நாடகம் அனைவருக்கும் உபதேசம் கூறித் தன் காரியத்தில் கண்ணாக இருக்கும் பணக்காரரை மற்றவர்கள் பழிவாங்கும் நிகழ்வைச் சொல்வது.அவசரத் தேவையாக உதவி கேட்பவர்களுக்கு உதவாமல் பொறுமையை உபதேசிக்கும் பணக்காரனை அவனுக்குத் தேவையான நேரத்தில் அதே உபதேசத்தினைக் கூறி உதவாமல் பழிவாங்கும் நிகழ்வே இந்நாடகத்தில் உள்ளடக்கம்.

**"இன்பக் கடல்"** இந்நாடகத்தில் அரசப்பன் என்பவன் காதலுக்காகப் பட்டு என்ற பெண்ணையும்,காசுக்காகத் தங்கம் என்ற பெண்ணையும் மணக்க முயலுகிறான்.அதற்காக இளவழகன் என்பவனுக்கும்,தங்கத்திற்கும் நடக்கவிருக்கும் திருமணத்தைத் தடுத்து அவளை மறைத்து வைக்கிறான். பட்டு தங்கத்தை விடுவித்து இளவழகனுடன் சேர்த்து வைக்கிறாள்.அரசப்பனின் முயற்சி தோல்வியடைகிறது.இந்நாடகம் பெண்களுக்கு ஆதரவாக எழுதப்பட்டுள்ளது.

“**சத்தி முத்தப் புலவர்**” என்ற இந்த இந்நாடகத்தில் பாண்டியமன்னனும்,அமைச்சனும் இரவு நேரத்தில் நகர்வலம் வருகின்றனர்.தெற்கு,வடக்கு,மேற்கு,தெருக்களை எல்லாம் கடந்து கிழக்குதெரு நோக்கி வரும் போது நாரை கடந்து போவதை காணுகின்றனர்.அப்போது ஒரு குரல் “நாராய் செங்கால் நாராய் “

என்று பாடல் அரசன் வியந்து கேட்டார்.மறுபடியும் “பழம்படு பனையின்கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்” என்று பாடுகிறார்.இவ்வாறு புலவரின் புலமை வெளிப்பட்ட பாங்கினை விரிவாக எழுத வேண்டும்.

இந்த நான்கு நாடகத்தில் இருந்தும் மாதிரி வினாக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வினாக்களை மாதிரியாக கொண்டு படிக்கவும்.

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பாரதிதாசன் இயற்பெயர் யாது?
2. பாரதிதாசனைக் கவிஞனாகத் தமிழ் நாட்டிற்கு அடையாளப்படுத்திய பாடல் எது?
3. நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்படுவர் யார்?
4. 1877 ஆம் ஆண்டு வெளிவந்த உடைநடையிலான நாடகம் எது?
5. கற்கண்டு நாடகத்தின்ட ஆசிரியர் யார்?
6. பொறுமை கடலினும் பெரிது எண்ணும் நாடகம்
7. கத்தி முத்தம் என்பது?
8. பழம்படு பனையின் கிழங்கு ‘பிளர்தன்ன’ யார் பாடியது?
9. அரசப்பன் என்ற கதாப்பாத்திரம் வரும நாடகம் எது?
10. தருமன் யாருடைய கதையை பாட துவங்குவான்?

## குறுகிய வினாக்கள்

1. பாரதிதாசன் - குறிப்பு வரைக?
2. புாரதிதாசனின் படைப்புகள் நான்கினை கூறுக.
3. நுாடகம் - சிறு குறிப்பு வரைக.
4. கற்கண்டு நாடகத்தின் முதன்மைக் கதாப்பாத்திரங்கள் நான்கினை கூறுக?

5. பொறுமை கடலினும் பெரிது என்ற நாடகத்தின் கதாப்பாத்திர பெயரினைக் குறிப்பிடுக?
6. புாரதிதாசனின் இன்பக்கடல் என்னும் நாடகத்தின் கதாப்பாத்திரங்களை எழுதுக?
7. நாட்டுப்புற நாடகங்கள் என்பவை எவை?
8. சத்தி முத்தப்புலவா் என்னும் நாடகத்தின் கதாப்பாத்திரங்கள் நான்கினை கூறுக.

**விரிவான வினாக்கள்**:-

1.கற்கண்டு நாடகத்தின் மையக்கருத்தினை விவரி?

1. கற்கண்டு நாடகம் வலியுறுத்தும் சமூகக் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
2. பொறுமை கடலின் பெரிது என்ற நாடகம் வலியுறுத்தும் அறம் யாது?
3. புாரதிதாசனின் பொறுமை கடலின் பெரிது என்ற நாடகத்தின் வழி வெளிப்படும் சமுதாய கருத்தினை விவரி?
4. இன்பக்கடல் என்ற நாடகத்தின் வழி பாரதிதாசன் வலியுறுத்தும் சிந்தனையை எழுதுக.
5. சத்தி முத்தப் புலவரின் புலமைத்திறன் வெளிப்பட்ட பாங்கினை விளக்குக.
6. சத்தி முத்தப் புலவா் என்ற நாடகத்தின் மையக் கருத்தினை விவரிக்க

.